# தூத்துக்குடி மாநகராட்சி

## சாதாரண கூட்டப் பொருள்

2024ம் ஆண்டு ஜுன் மாதம் 28ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதி எண் 156(1) கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| **28.06.2024** | 1) இம்மாநகராட்சியில் நடைபெற்று வரும் – ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின் கீழ் மழைநீர் வடிகால் (சிப்பம் 1–4) பணிகளை செயல்படுத்துவதற்கு பொதுநிதியின் கீழ் **Contract Management and Supervision Consultancy Services(CMSC)** பணிக்கு 15.02.2024 அன்று வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளியின் தொழில்நுட்ப உறை 15.02.2024அன்று திறக்கப்பட்டது.<br>1. M/s.WAPCOS Limited., Chennai–நிறுவனம்<br>2. M/s.Microtec Enterprises, Thoothukudi –நிறுவனம்<br><br>மேற்படி இரண்டு நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s.WAPCOS Limited., Chennai– நிறுவனம் மட்டும் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண் 110/23–24நாள்16.02.2024 ல் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒரு நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை திறக்க உரிய அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு 20.02.2024 ஆம் தேதியன்று திறக்கப்பட்டு அதன்படி M/S.WAPCOS Limited., Chennai–நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியின்படி ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதியின் கீழ் மழைநீர் வடிகால் (சிப்பம் 1–4) பணிகளை செயல்படுத்துவதற்கு Contract Management and Supervision Consultancy Services(CMSC) பணிக்கு Remuneration-க்கான தொகை ரூ.2,05,20,000/-GST 18% நீங்கலாக மற்றும் ReimbursableExpenses ஒரு மாதத்திற்கு ரூ.75,500/-GST 18% நீங்கலாகம் (Rs.75,500.00 / Month x 18Months=**Rs.13,59,000.00** )கொடுத்துள்ளார். மேலும் **CMSC** பணிக்குமட்டும் 18மாதங்களுக்கு மொத்த தொகையானது **ரூ.2,05,20,000.00** GST 18% நீங்கலாகM/S. Wapcos Limited, Chennai நிறுவனம் கொடுத்துள்ளார். | 440)அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | மேலும் நிறுவனம் கொடுக்கப்பட்ட தொகையானது பட்டியலிடப்பட்ட(சிப்பம் **1–4)** வரையிலான பணியின் மதிப்பீட்டுத் தொகையில் **(73.74**கோடி**)** 2.97சதவீதம் ஆகும். மேலும் நிறுவனத்திடம் 21.02.2024அன்று விலை குறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில், நிறுவனம் 23.02.2024 ஆம் தேதியன்று விலை குறைப்பு செய்து கடிதம் கொடுத்துள்ளனர் அதன் அடிப்படையில் M/S.WAPCOS Limited., Chennai–நிறுவனத்தார் விலைகுறைப்புக்குப்பின் கொடுக்கப்பட்ட நிறுவனமானது **CMSC** பணிக்கு ஆணையர் அவர்கள் adequate Manpower Requirements மாற்றியமைக்க ஒப்புதல் அளித்ததின் படி **CMSC** பணிக்கு Remuneration தொகையானது **ரூ1,33,20,000/–** GST 18% நீங்கலாகவும் மற்றும் Reimbursable Expenses மாதத்திற்கு **ரூ.70,000/-** GST 18% நீங்கலாகவும் (Rs.70,000.00/ Month x 18Months = **Rs.12,60,000.00)** கொடுத்துள்ளனர். மேலும் நிறுவனம் கொடுக்கப்பட்ட தொகையானது **CMSC** பணிக்குபட்டியலிடப்பட்ட (சிப்பம் **1–4)** வரையிலான பணியின் மதிப்பீட்டுத் தொகையில் **(73.74**கோடி GST நீங்கலாக**)** Remuneration & Reimbursable Expenses தொகையானது **(1,33,20,000.00+12,60,000.00** மொத்த தொகை =1,45,80,000.00GST 18% நீங்கலாக) 1.98சதவீதம் ஆகும். எனவே மேற்படிபணிக்கு M/S.WAPCOS Limited., Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றஅனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலகக் குறிப்பு<br><br>1. ஆசியவளர்ச்சி வங்கி (ADB) நிதியின் கீழ்மழைநீர் வடிகால் **(**சிப்பம் **1–4)** பணிகளை செயல்படுத்துவதற்கு பொதுநிதியின் கீழ் Contract Management and Supervision Consultancy Services(CMSC) பணிக்கு M/S.WAPCOS Limited., Chennai - நிறுவனத்திற்கு வேலை ஏற்பு கடிதம் வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசரம் அவசியம் கருதி மாண்புமிகுமேயர் அவர்களின் முன்அனுமதியினைத் தொடர்ந்து வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**இ1/9047/14** | |
| | **2)** தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான சிவந்தாகுளம் மாநகராட்சி பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள சிறப்பு குழந்தைகளுக்கான பள்ளிக்கு பயிற்சிக்காக வருகைத் தரும் குழந்தைகளை அழைத்து வருவதற்கு TMB – மூலம் மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு எண்ணம் பள்ளி வேன்களையும் இயக்குவதற்கு இரண்டு ஓட்டுநர்கள் ஓர் | **441)** அலுவலகக் குறிப்பு<br>**1.**அனுமதிக்கப் பட்டது.<br>**2.**அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஆண்டு காலத்திற்கு நகர்புற வாழ்வாதார மையத்தின் மூலம் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்த நிலையில் மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 16.08.2023 உடன் முடிவடைந்த நிலையில் மேற்படி பணியாளர்களுக்கு பணிக்காலத்தை 17.082023 முதல் 30.06.2024 வரையிலான காலங்கள் வரை நீட்டிப்பு செய்வதற்கும், தினக்கூலி ரூ.551/– வீதம் மேற்படி காலங்களுக்கான உத்தேச செலவினத் தொகை ரூ.3.53 இலட்சம் மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மேற்படி தினக்கூலி பணியாளர்களுக்கு 17.08.2023 முதல் 25.02.2024 வரையில் ஊதியம் வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 26.02.2024 முதல் 30.06.2024 வரையிலான காலத்திற்கு பணிநீடிப்பு செய்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ5/3725/2022 | |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி தற்பொழுது 90.66 சதுர கி.மீ பரப்பளவில் 60 வார்டுகளை உள்ளடக்கியது ஆகும். இம்மாநகராட்சியில் 2011ம் ஆண்டு கணக்குப்படி மக்கள் தொகை 3,72,408 ஆகும். தற்போது மாநகராட்சி பகுதிக்கு வெவ்வேறு திட்டங்களின் மூலம் தற்பொழுது 66.20 MLD குடிநீர் வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பம்பிங் செய்யப்பட்டு 30 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் தூத்துக்குடி மாநகர பகுதி மக்களுக்கு சுமார் 600 கி.மீ பைப்லைன் குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.<br>தற்பொழுது மாநகராட்சியில் அடிக்கடி ஏற்படும் தண்ணீர் குழாய்கள் உடைப்பு தண்ணீர் கசிதல் சரியான முறையில் தண்ணீரை மக்களுக்கு பகிர்ந்து அளித்தல் ஆகிய பணிகளை செய்ய மாநகராட்சியில் போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் CLC மூலம் தற்காலிக அடிப்படையில் 2023–2024ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் electrician - 1 (554), electrical helper - 6(490), cleaner-3(433), cleaner (Lab attender) - 3(433), Fitter - 1(554), cleaner (Watchman) - 2(433), cleaner - 51( 433) ,01.04.2024 முதல் 31.03.2025 வரை ஒரு வருட காலத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான | 442)அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ 95.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு:</u>**<br>1) இம்மாநகராட்சியில் நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் சீரிய முறையில் குடிநீர் விநியோகம் செய்ய தினக்கூலி அடிப்படையில் electrician - 1 (554), electrical helper - 6(490), cleaner- 3(433), cleaner (Lab attender) - 3(433), Fitter - 1(554), cleaner (Watchman) - 2(433), cleaner - 51( 433) ,01.04.2024 முதல் 31.03.2025 வரை ஒரு வருட காலத்திற்கு பணியில் ஈடுத்திக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ 95.00 இலட்சத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைள் அங்கீகரிக்கலாம்.<br>இ2 /3874/18 | |
| | 4) இம்மாநகராட்சியில், துணை மேயர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக வாங்கப்பட்ட போலீரோ ஜீப் வானகத்திற்கு, நிரந்தர வாகன ஓட்டுநர் இல்லாத காரணத்தினால், நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் (CLC) Light Duty Driver ஒருவர் நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது அவரின் பணிக்காலம் நிறைவடைந்த நிலையில் தற்போது பணிக்காலத்தை நீட்டிப்பு செய்து, 2023–24 ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி , நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.551/– வீதம் 01.04.2024 முதல் 31.03.2025 வரையில், ஓர் ஆண்டு காலத்திற்கு துணை மேயர் அவர்களின் வாகனத்தை இயக்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.2.50 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.<br>இ5/3725/2022 | 443)அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப் பட்டது. |
| | 5) இம்மாநகராட்சி மைய மற்றும் மண்டல அலுவலகங்களில் நடைபெறும் அலுவலக பணிகள் முற்றிலும் கணினி மயமாகிவிட்டதால், குடிநீர் (கேட்பு எழுப்புதல்) மேற்கொள்ளவும், மற்றும் சொத்துவரி பொது சீராய்வு பணியினை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை விரைந்து முடிக்கவும், போதிய பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாததால் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை 2022–23ம் ஆண்டு | 444)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நகர்புற வாழ்வாதார மையம் (City Livelihood Centre) மூலம் கணினி இயக்குபவர்கள் (Data Entry Operator) கணினி பிரிவு மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு தற்காலிக ஊதியம் அடிப்படையில் 8 கணினி இயக்குபவர்கள், மாமன்ற தீர்மான எண்.304, நாள்.31.03.2023ன் படி அனுமதிக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2024ல் முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட 8 பணியாளர்களின் பணிக்காலத்தினை 01.04.2024 முதல் 30.06.2024 வரை மூன்று மாதக்காலம் வரை நீட்டித்துக் கொள்ளவும், 2023–24ம் ஆண்டின் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின் பேரில் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.606/–வீதம், உத்தேச செலவினத் தொகை 3 மாதத்திற்கு ரூ.4.55 இலட்சம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு இம்மாநகராட்சியில் நகர்புற வாழ்வாதார மையம் (CLC)மூலம் பணியமர்த்தப்பட்ட கணினி இயக்குபவர்கள் 8 நபர்களின் பணிக்காலத்தினை 01.04.2024 முதல் 30.06.2024 வரை மூன்று மாத காலத்திற்கு நீட்டிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.55 இலட்சத்தை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் | |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியான சத்திரம் தெரு கழிவு நீரேற்று நிலையம், குரூஸ்புரம் நிலையம், பாளை ரோடு மார்க்கெட் சந்திப்பு கழிவுநீரேற்று நிலையம், ஆகியவைகளில் தினமும் மோட்டார்களை இயக்கி சேகரமாகும் கழிவுநீரை வெளியேற்றம் செய்யும் பணிகள் மற்றும் மைய அலுவலக வளாகத்தில் மின் தடை ஏற்பட்டு அலுவலக பணிகள் பாதிக்கப்படும் சூழலில் இதன் பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்டுள்ள 250 KVA ஜெனரேட்டரை இயக்கவும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், போதிய பணியாளர்கள் இம்மாநகராட்சியில் இல்லாத நிலையில் தினக்கூலி அடிப்படையில் பம்ப் ஆப்பரேட்டர் மற்றும் கிளீனரை நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் தற்காலிக அடிப்படையில், நடப்பு ஆண்டு மாமன்ற தீர்மான எண் 303, நாள்31.03.2023 ன் படி 01.04.2023 முதல் 31.3.2024 வரை பம்ப் ஆப்பரேட்டர் 3 நபர்கள், மற்றும் கிளீனர் 1 நபர் ஈடுபடுத்திக்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2024 உடன் முடிவடைகிறது.<br>மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலத்தினை | 445)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **01.04.02024** முதல் **31.03.2025** வரை நீட்டித்துக் கொள்ளவும், **2023–24**ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் பம்ப் ஆப்பரேட்டர் ரூ.**586** மற்றும் கிளீனர் ரூ.**458** வீதம் உத்தேச செலவினத் தொகை ஆண்டிற்கு ரூ.**8.50** லட்சம் குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதியில் இருந்து செலவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: இம்மாநகராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியமர்த்தப்பட்ட பம்ப ஆப்பரேட்டர் **3** நபர்கள் மற்றும் கிளீனர் **1** நபருக்கு பணிக்காலத்தினை **01.04.2024** முதல் **31.03.2025** வரை ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**8.50** இலட்சத்தை மாநகராட்சியின் குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**இ5/2396/2019** | |
| | 7)தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலங்களில் நடைபெறும் சீர்மிகு நகர அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்றுவரும் நிலையில் மேற்படி பணிகளை பார்வையிடவும் பணியினை அளவீடு செய்து செலவீனப்பட்டியல் தயார் செய்ய இளநிலை பொறியாளர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் உதவிட ஏதுவாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை **2022–23**ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் **11** தொழில்நுட்ப உதவியாளர்கள் தற்காலி ஊதிய அடிப்படையில் **01.04.2023** முதல் **31.03.2024** வரையில் பணியில் ஈடுபடுத்திக்கொள்ள மாமன்ற தீர்மான எண் **302** நாள்.**31.03.2023** ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிக்காலம் **31.03.2024** வுடன் முடிவடைகிறது.<br>மேற்கண்ட **11** தொழில்நுட்ப உதவியாளர்கள் பணிக்காலத்தை **01.04.2024** முதல் **31.03.2025** வரை நீட்டித்து கொள்ளவும், **2023–24**ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் பட்டயப்படிப்பு (Diploma in Civil Engineering) – ரூ.**606/–**, பட்டப்படிப்பு (Bachelor of Engineering) – ரூ.**798/–**, வீதம் உத்தேச செலவினத் தொகை ஆண்டிற்கு ரூ.**29.00** லட்சம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br>**1)** இம்மாநகராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியமர்த்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளா் **11** நபர்களின் பணிக்காலத்தினை **01.04.2024** முதல் **31.03.2025** வரை ஓர் ஆண்டிற்கு காலத்திற்கு நீட்டிக்கவும் | **446)**அலுவலகக் குறிப்பு<br>**1.**அனுமதிக்கப்பட்டது.<br>**2.**அங்கீகரிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | அதற்கான உத்தேச செலவினம் ரூ.29.00 லட்சத்தை மாநகராட்சியின் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.<br><br>இ5/0186/2017–12018 | |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சியில் அடிக்கடி ஏற்படும் தண்ணீர் குழாய்கள் உடைப்பு தண்ணீர் கசிதல், சரியான முறையில் தண்ணீரை பொதுமக்களுக்கு பகிர்ந்தளித்தல், ஆகிய பணிகளை செய்ய மாநகராட்சியில் நிரந்திர குழாய் ஆய்வாளர்கள் (Tap Inspector) 6 நபர்கள் உள்ளனர். மாநகராட்சியின் மூலமாக மக்களுக்கு சீரிய முறையில் குடிநீர் விநியோகம் செய்ய பொருத்துநர் (Fitter) 4 நபர்கள் 01.08.2023 முதல் 31.03.2024 வரையில் 8 மாத காலத்திற்கு மாநகராட்சியில் நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் தற்காலிக அடிப்படையில் 2023–24 ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நியமனம் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்திக்கொள்ள மாமன்ற தீர்மான எண் 357 நாள்.27.07.2023 ல் ஒப்புதல் பெறப்பட்டு அதில் 2 நபர்கள் மட்டும் பணிபுரிந்து வருகின்றனர். மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2024 உடன் முடிவடைகின்றது.<br>மேற்கண்ட 2 பணியாளர்களின் பணிக்காலத்தினை 01.04.2024 முதல் 31.03.2025 வரையில் நீட்டிப்பு செய்யவும், 2023–24 ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் ரூ.586/– வீதம் உத்தேச செலவினத் தொகை ஆண்டிற்கு ரூ.4.50 லட்சம் மாநகராட்சியின் குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதியில் இருந்து செலவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>இம்மாநகராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் சீரிய முறையில் குடிநீர் விநியோகம் செய்ய பொருத்துநர்கள் 2 நபருக்கு பணிக்காலத்தினை 01.04.2024 முதல் 31.03.2025 வரையில் ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சத்தை மாநகராட்சியின் குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ5/1576/2018 | 447)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | 9) இம்மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் பணிபுரியும் உதவி செயற் பொறியாளர் (பணிகள்) அவர்களுக்கு வாகன ஓட்டுநராக நகர்புற வாழ்வாதார மையம் (City Livelihood Centre) மூலம் மேற்கண்ட பணிக்கு தினக்கூலி அடிப்படையில், ஒரு நபரை 01.10.2023 முதல் 31.02.2024 வரையில் 6 மாத காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டு | 448)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | பணிபுரிந்து வந்த நிலையில் மேற்கண்ட பணியாளரின் பணிக்காலம் 31.03.2024ல் முடிவடையும் தருவாயில் உள்ளது. எனவே, மேற்கண்ட பணியாளருக்கு 01.04.2024 முதல் 31.03.2025 வரை ஒரு வருட காலத்திற்கு பணி அமர்த்திடவும், மேலும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் 2023–24 ஆம் ஆண்டிற்கான செயல்முறை ஆணையின்படி ஊதியம் வழங்கிடவும், மேற்படி பணிக்கான உத்தேச செலவினம் நாள் ஒன்றுக்கு ரூ.551/– வீதம் 1 வருடத்திற்கு ரூ.1.80 லட்சத்திற்கு மாநகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ5/5639/2023 | |
| | 10) தூத்துக்குடி மாநகராட்சியின் மாநகர்நல அலுவலர் அவர்கள் மாநகராட்சிக்கு சொந்தமான 7 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 10 நகர் நல மையங்கள் உள்ளது. மேற்படி மையங்களில் செயல்பாடுகள், மருத்துவர் மற்றும் பணியாளர்களின் மருத்துவ பணிகள் மேலும் சுகாதாரம் தொடர்பாக செயல்பட்டுவரும் 12 பிரிவுகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் வருகை, மாநகரப் பகுதியின் தூய்மை குறித்தான ஆய்வு, அரசின் நலத்திட்டமான மக்களை தேடி மருத்துவம் மற்றும் தூய்மை பணியாளர்களின் ஆரோக்கியம் சார்ந்த மருத்துவ முகாம்கள் போன்றவற்றை நேரில் சென்று தினமும் ஆய்வு பணிகள் மேற்கொள்ள வாகனம் இல்லாத காரணத்தினால் மாநகர்நல அலுவலர் அவர்கள் மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு Scorpio வாகனம் வாங்கும் வகைக்கு இம்மாமன்ற தீர்மானம் எண் 439 நாள். 27.02.2024 ன் படி ரூ.15.00 லட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டது.<br>இந்நிலையில் புதிய வாகனமான Scorpio Classic NZ8 Select Model Mahindra வாகனமானது GEM PORTAL மூலமாக கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி விலைப்புள்ளிகளில் Scorpio Classic NZ8 Select Model Mahindra வாகனத்தின் விலை ரூ.18லட்சம் + வரிகள் தனி என விலை விகிதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேலும் மேற்படி வாகனத்திற்கான காப்பீடு கட்டணம் (Insurance) சாலை வரி (Life Tax) நிரந்த பதிவுச் சான்று ஆகியவற்றிற்கான கூடுதல் செலவினங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர் Derik Mahindra , Tirunelveli, அவர்களால் புதியதாக Scorpio Classic NZ8 | 449)அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப்பட்டது.<br>2.ரத்து செய்ய அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | Select Model Mahindra வாங்குவதற்கு மொத்த செலவினத் தொகை (ரூ.18.09 லட்சம் + வரிகள்தனி) மாநகராட்சி பொது நிதியில் செலவு செய்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மாநகர்நல அலுவலர் அவர்களின் மருத்துவ பணிகள் தொடர்பான ஆய்வு பணிக்காக புதிய வாகனம் Scorpio Classic NZ8 Select Model Mahindra வாங்குவதற்கான செலவினத் தொகை (ரூ.18.09 லட்சம் (வரிகள் தனி) மாநகராட்சி பொது நிதியில் செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பொருள் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட **27.02.2024**ம் தேதிய **439** எண் கொண்ட மாமன்ற தீர்மானத்தை ரத்து செய்யலாம்.<br><br>எச்1/0808/2024 | |
| | **11)** தூத்துக்குடி மாநகராட்சி சங்கரபேரி கிராமம் சர்வே எண் **233/2**A1,**233/2**A2 ல் **6930.00** ச.மீ /**1.71** ஏக்கர் பரப்பளவு இடத்தில் மனுதாரர் திரு.மூ.தர்மராஜ் அவர்களின் குடியிருப்பு மனைப்பிரிவு சாலை அமைப்பு மற்றும் பொது ஒதுக்கீடு இடத்திற்கான வரைபடம்தொழில் நுட்ப அனுமதி SWP/DTCP/Thoothukudi Revised layout No.20/2024,(SWP/DTCP/Thoothukudi layout No.113/2023) Revised Planning Permission No.10/2024 என்று எண்ணிடப்பட்டு **23.02.2024** தேதியில் உறுப்பினர் செயலர்(பொ) தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழுமம் தூத்துக்குடி அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>வீட்டு வசதி (ம) நகர்ப்புறம் வளர்ச்சித்துறை அரசாணை எண் G.O.(Ms) No.181 நாள் **09.12.2020**ல் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு வரைபடத்தின்படி மனைப்பிரிவில் அமையும் சாலைக்குரிய இடம் மாநகராட்சிக்கு பொது ஒதுக்கீடு இடத்தினை மாநகராட்சிக்கு தானமாக பதிவுசெய்யப்பட்ட ஆவணம் எண்கள்.**4330/2023** நாள்.**09.10.2023** மற்றும் **529/2024** நாள்.**14.02.2024** உள்ளூர் திட்டக்குழுமத்தின் வழியாக ஆவணம் பெற்று மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>எப்1/590/2024 வ.ம | 450) அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது |

12) தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவின் பல்வேறு வகையான 170 வாகனங்கள் பொது சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளுக்காக பொது மக்களின் பயன்பாட்டிற்காக தினமும் பகல் மற்றும் இரவு நேரம் தூய்மை பணிகளுக்கு தொடர்ச்சியாக இயக்கப்பட்டு வருவதால், மேற்படி வாகனங்களில் ஏற்படுகின்ற பழுதுகள் அவ்வப்போது உடனடியாக சரி செய்யப்பட்டு வாகனங்கள் மேற்படி பணிகளில் தொய்வு ஏற்படாமல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி வாகனங்கள் செலவீனம் தொடர்பாக, தமிழ்நாடு துறை இயக்கூர்திகள் பழுதுகள் மற்றும் பராமரிப்பு விதிகள் 1976 அரசாணை எண்.983.உள்துறை (போக்குவரத்து) நாள்.03.08.2004ன்படி,அரசாணை பிறப்பித்து சுமார் 19 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தற்போதைய காலங்களின் விலைவாசி ஏற்றத்தினை ஒப்புநோக்கும் போது, அரசாணையில் நிர்ணயித்த அளவுகோலின்படி வாகனங்கள் பராமரிப்பு பழுது பணிகளுக்கு செலவீனங்கள் மேற்கொள்வது இயலாத காரியமாக உள்ளது.

மேற்படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் தனியார் ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைக்கும் பொருட்டு, நிர்வாக காரணங்களால் மண்டலங்கள் வாரியாக பகுதி, பகுதியாக ஜுலை 2023 முதல் அக்டோபர் 2023 வரை தனியார் ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில், மாநகராட்சி வசம் இருந்த மேற்படி வாகனங்களுக்கு ஏப்ரல் 2023 முதல் அக்டோபர் 2023 வரை பராமரிப்பு மற்றும் பழுது நீக்கப் பணிகள் மேற்கொண்டதற்கு ரூ 21,74,330 /–ஐ கீழ்க்கண்ட விவரப்படி செலவிடப்பட்டுள்ளது.

| காலம் | இலகுரக வாகனம் | கனரக வாகனம் | இதர வாகனம் | வாகனங்களின் எண்ணிக்கை | செலவீனம் தொகை |
|---|---|---|---|---|---|
| 04/2023 | 22 | 1 | 3 | 26 | 2,62,304 /– |
| 05/2023 | 39 | 1 | 3 | 43 | 5,42,914 /– |

451) அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 06/2023 | 31 | 3 | 3 | 37 | 5,39,951 /– |
| 07/2023 | 30 | 1 | 1 | 32 | 3,67,476 /– |
| 08/2023 | 3 | 5 | 1 | 9 | 2,88,962 /– |
| 09/2023 | 9 | 0 | 0 | 9 | 68,208 /– |
| 10/2023 | 4 | 0 | 1 | 5 | 1,04,515 /– |
| மொத்தம் | 138 | 11 | 12 | 161 | 21,74,330 /– |

எனவே, மேற்படி அத்தியாவசிய சுகாதார தூய்மைப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்ட மாநகராட்சி வசம் இருந்த வாகனங்களில் ஏற்பட்ட பராமரிப்பு மற்றும் பழுது நீக்கப் பணிகள் ஏப்ரல் 2023 முதல் அக்டோபர் 2023 வரை மேற்கொண்டதற்கான செலவுத் தொகை ரூ 21,74,330 /– க்கு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்.

எச்5/ 0120 / 2020 (வா.ப)

| | | |
|---|---|---|
| | 13) உள்ளாட்சிகளில் பணிபுரியும் அலுவலர்கள், உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் அனைவருக்கும் பணிகள் குறித்த அடிப்படை பயிற்சி மற்றும் அரசு அவ்வப்போது அறிவிக்கும் புத்தாக்க பயிற்சி ஆகியன இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி ஆகியன இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் வருடாந்திர பங்களிப்பு தொகை ரூ.3.00 இலட்சம் செலுத்த நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (எம்.இ.1) துறை அரசாணை (எம்.எஸ்)எண் 36 நாள் 19.04.2021 இல் ஆணையிட்டுள்ளது.<br>அதன் பேரில் இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் எண் 047/2024/அ2 நாள் 22.05.2024ல் 2024–25ஆம் ஆண்டிற்கு உள்ளாட்சிகளின் மூலம் செலுத்தப்படும் தமிழ்நாடு நகரியல் | 452)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | பயிற்சி நிறுவனத்திற்கான பங்குத்தொகை ரூ.3.00 இலட்சம் செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.<br>ஏனவே இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை நிறுவனத்திற்கு 2024–2025ம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாநகராட்சியின் பங்கு தொகை ரூ.3.00 இலட்சம் செலுத்திடவும், அதற்கான செலவினத்தினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>சி/3293/2023 | |
| | 14) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – குடிநீர் மற்றும் வடிகால் நிதிதிட்டத்தின் Engaging JCB for Site Cleaning and Laying of Distribution line 110mm,315mm HDPE pipe line, 200mm HDPE pipe line for Tree Plantation in Tharuvaikulam STP North to East Side பணிக்கு ஆணையர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதின் பேரில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்பஉறை 07.06.2024 அன்று திறக்கப்பட்டு தொழில்நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு<br>1. M/s.IJ Construction, Thoothukudi – ஒப்பந்ததாரர்<br>2. Thiru.J.Suresh Jeyakumar, Thoothukudi – ஒப்பந்ததாரர்<br><br>மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில் நுட்பதகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண் 1/24-25நாள்11.06.2024 ல் தொழில்நுட்ப கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்டு 12.06.2024அன்று விலைப்புள்ளி உறை திறக்க ஆணையர் அவர்களின் அனுமதிபெற்றுதிறக்கப்பட்டதின் ஒப்புநோக்குபட்டியல்கீழ்கண்டவாறு<br>1. M/s.IJ Construction, Thoothukudi – ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 0.20% குறைவு(ரூ.52,08,013.00)<br><br>2. Thiru.J.Suresh Jeyakumar, Thoothukudi – | 453)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட3.01% அதிகம் (ரூ.53,75,704.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.20% குறைவான தொகை ரூ.52,08,013.00 (GSTநீங்கலாக) கொடுத்துள்ள M/s.IJConstruction, Thoothukudi, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. M/s.IJ Construction, Thoothukudi ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றஅனுமதிக்கலாம்.<br>2. மேற்படிபணிக்குமாமன்றத்தின் அனுமதியைஎதிர்நோக்கிமதிப்பீட்டைவிட0.20% குறைவாககொடுத்துள்ள M/s.IJ Construction, Thoothukudi ஒப்பந்ததாரருக்குவேலைஏற்புகடிதம் வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ4/603/2024 | |
| | 15) தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி.பொன்மணி என்பவருக்கு கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகை(ASD) செலுத்தியுள்ளார். | 454)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | Name of Work | Estimat No | EMD | DATE | ASD | DATE |
|---|---|---|---|---|---|---|
| 1. | Cleaning and removing the seemaikaruvelam tree at machado magar | 75/18-19 | 1,750/- | 20.08.2018 | 1,750/- | 28.08.2018 |
| 2. | Providing two-Wheelar shed and aluminium Partition work at maternity centre | 76/18-19 | 4,400/- | 20.08.2018 | 4,400/- | 28.08.2018 |
| 3. | Providing Fencing arrangements at machado nagar park 3 | 90/18-19 | 5,750/- | 28.08.2018 | 5,750/- | 19.09.2018 |
| 4. | Providing BT surface at KTC Nagar depo (Near Muthammal colony) | 247/18-19 | 22,000/- | 27.12.2018 | 18,400/- | 03.01.2019 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | Construction of ward office (division 13) at santhai road | 176/ 18-19 | 13,800/- | 19.11.2018 | 11,700/- | 03.01.2019 |
| | Total | | **47,700/-** | | **42,000/-** | |
| | **TOTAL AMOUNT** | | **89,700/-** | | | |

மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியினை செய்து முடித்து **3** வருடத்திற்கு மேலாகியுள்ளதால் மேற்படி பணிக்கு செலுத்திய முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை (ASD) திரும்ப வழங்குவது தொடர்பாக சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, எனவே அன்னார் செலுத்திய வைப்புத்தொகையை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அரசாணை எண். எம்.எஸ்.எஉ.**621**/ஊ.வ மற்றும் உள்ளாட்சி துறை நாள்.**08.04.1980**ன் படி அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகையாகும்.

மேற்படி பட்டியலில் கண்டுள்ள காலங்கடந்த வைப்புத்தொகை ரூ.**89,700/-**ல் தணிக்கை தடை தொகை ரூ.**2,318/-**னை பிடித்தம் செய்து மீதமுள்ள வைப்புத்தொகை ரூ.**87,382/-**னை மேற்படி பணியினை செய்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.பொன்மணி என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ள முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.**89,700/-**ல் தணிக்கை தடை தொகை ரூ.**2,318/-**னை பிடித்தம் செய்து மீதமுள்ள ரூ.**87,382/-**னை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளரின் பரிந்துரைப்படி ஒப்பந்ததாரர் திருமதி.பொன்மணி என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

பி3/5063/2023

| | | |
|---|---|---|
| | **16)** தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு.முத்துராமன் என்பவருக்கு கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகை(ASD) செலுத்தியுள்ளார். | **455)**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | Name of Work | Estimat No | EMD | DATE | ASD | DATE |
|---|---|---|---|---|---|---|
| 1. | Poviding MS Pipe arrangements over PCB at Buckle odai crossing and support arrangement at Uppathu Odai for IWSS work | 139/19-20 | 7,650/- | 25.02.2020 | 7,650/- | 27.02.2020 |
| 2. | Shifting of LTCT connection meter chamber and providing new UG cables and accessories at Corporation main office building | 138/19-20 | 18,700/- | 25.02.2020 | 18,700/- | 27.02.2020 |
| 3. | Valve Replacement at Alagespuram | 136/19-20 | 22,500/- | 25.02.2020 | 22,500/- | 27.02.2020 |
| 4. | Laying Feedermain at state Bank colony (Near North zone office road) | 96/19-20 | 6,800/- | 07.01.2020 | 6,800/- | 25.01.2020 |
| 5. | Providing MS display board with letter arrangement for corporation sities at all Zone | 5c/20-21 | 1,900/- | 07.08.2020 | 1,900/- | 07.08.2020 |
| 6. | Construction of SWD with Culvert at Kurinji nagar main road | 5a/20-21 | 910/- | 07.08.2020 | 910/- | 07.08.2020 |
| 7. | Providing electrical renovation work For 1/3 pole MCB's and DB @corporation main Building | 5b/20-21 | 910/- | 07.08.2020 | 910/- | 07.08.2020 |
| 8. | Construction of RCC SWD at Kurinji Nagar | 273/18-19 | 45,500/- | 07.01.2019 | 45,500/- | 07.01.2019 |
| 9. | Providing GI pipe chain Link fecing arrangement at Athiparasakthi nagar | 83/20-21 | 4,700/- | 15.02.2021 | 4,700/- | 11.07.2022 |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>Total</td><td>1,09,570/-</td><td>1,09,570/-</td></tr>
<tr><td></td><td>TOTAL AMOUNT</td><td colspan="2">2,19,140/-</td></tr>
</table>
மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியினை செய்து முடித்து 3 வருடத்திற்கு மேலாகியுள்ளதால் மேற்படி பணிக்கு செலுத்திய முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை (ASD) திரும்ப வழங்குவது தொடர்பாக சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, எனவே அன்னார் செலுத்திய வைப்புத்தொகையை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அரசாணை எண். எம்.எஸ்.எஉ.621/ஊ.வ மற்றும் உள்ளாட்சி துறை நாள்.08.04.1980ன் படி அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகையாகும்.
மேற்படி பட்டியலில் கண்டுள்ள காலங்கடந்த வைப்புத்தொகை ரூ.2,19,140/-னை மேற்படி பணியினை செய்துள்ள ஒப்பந்ததாரர் திரு.முத்துராமன் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு :</u> காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ள முன் வைப்புத்தொகை (EMD) ரூ.1,09,570/-மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.1,09,570/- என ஆக மொத்தம் ரூ.2,19,140/-னை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் அவர்களின் பரிந்துரைப்படி ஒப்பந்ததாரர் திரு.முத்துராமன் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
பி3/1308/2024
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>17) இம்மாநகராட்சி மைய மற்றும் மண்டல அலுவலகங்களில் நடைபெறும் அலுவலக பணிகள் முற்றிலும் கணினி மயமாகிவிட்டதால், குடிநீர் (கேட்பு எழுப்புதல்) மேற்கொள்ளவும், மற்றும் சொத்துவரி பொது சீராய்வு பணியினை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை விரைந்து முடிக்கவும், போதிய பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாததால் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை 2022–23ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நகர்புற வாழ்வாதார மையம் (City Livelihood Centre) மூலம் கணினி இயக்குபவர்கள் (Data Entry Operator) கணினி பிரிவு மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு தற்காலிக ஊதியம் அடிப்படையில் 8 கணினி இயக்குபவர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலம் 30.06.2024ல் முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே,</td>
<td>456)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட 8 பணியாளர்களின் பணிக்காலத்தினை 01.07.2024 முதல் 31.03.2025 வரை நீட்டித்துக் கொள்ளவும், 2023–24ம் ஆண்டின் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின் பேரில் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.606/– வீதம், உத்தேச செலவினத் தொகை 9 மாதத்திற்கு ரூ.13.35 இலட்சம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>இம்மாநகராட்சியில் நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியமர்த்தப்பட்ட கணினி இயக்குபவர்கள் 8 நபர்களின் பணிக்காலத்தினை 01.07.2024 முதல் 31.03.2025 வரை 9 மாத காலத்திற்கு நீட்டிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.13.35 இலட்சத்தை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ5/1576/2018 | |
| | 18) இம்மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகங்களில் நடைபெறும் அலுவலக பணிகள் முற்றிலும் கணினி மயமாகிவிட்டதால், குடிநீர் (கேட்பு எழுப்புதல்) மேற்கொள்ளவும், மற்றும் சொத்துவரி பொது சீராய்வு பணியினை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை விரைந்து முடிக்கவும், போதிய பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாததால், அவசர அவசியம் கருதி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை 2023 –24ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நகர்புற வாழ்வாதார மையம் (City Livelihood Centre) மூலம் மேற்கு மண்டல அலுவலகத்திற்கு தற்காலிக ஊதியம் அடிப்படையில் 1 கணினி இயக்குபவரை (Data Entry Operator) 26.04.2024 முதல் 30.04.2025 வரை பணியமர்த்தியதற்கு, 2023–24 ம் ஆண்டின் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் பேரில் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.606/– வீதம், உத்தேச செலவினத் தொகை ஆண்டிற்கு ரூ.2.22 இலட்சம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ5/1576/2018 | 457)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | 19) தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு.ஜோதிமணி என்பவருக்கு கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகை(ASD) செலுத்தியுள்ளார். | 458)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | Name of Work | Estimat No | EMD | DATE | ASD | DATE |
|---|---|---|---|---|---|---|
| 1. | Providing BT Surface at State Bank Colony 2nd Street (Gomathi bai Colony) | 219/18-19 | 18,000/- | 27.12.2018 | 15,500/- | 28.08.2018 |
| 2. | Providing BT Surface at Dhavasi Nagar upto st.Mary's Colony | 333/17-18 | 26,750/- | 20.06.2018 | 24,000/- | 29.06.2018 |
| 3. | Providing BT Surface at Annai Indra Nagar Main Road,Devar Colony | 270/18-19 | 49,000/- | 03.01.2019 | 40,000/- | 06.03.2019 |
| 4. | Providing BT Surface at Dhamothara Nagar (Near Susee Complex) | 139/18-19 | 14,000/- | 16.11.2018 | 12,200/- | 19.11.2018 |
| | Total | | **1,07,750/-** | | **91,700/-** | |
| | **TOTAL AMOUNT** | | **1,99,450/-** | | | |

மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியினை செய்து முடித்து **3** வருடத்திற்கு மேலாகியுள்ளதால் மேற்படி பணிக்கு செலுத்திய முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை (ASD) திரும்ப வழங்குவது தொடர்பாக சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, எனவே அன்னார் செலுத்திய வைப்புத்தொகையை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அரசாணை எண். எம்.எஸ்.எஉ.**621**/ஊ.வ மற்றும் உள்ளாட்சி துறை நாள்.**08.04.1980**ன் படி அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகையாகும்.

மேற்படி பட்டியலில் கண்டுள்ள காலங்கடந்த வைப்புத்தொகை ரூ.**1,99,450/-**ல் தணிக்கை தடை தொகை ரூ.**59,443/-**னை பிடித்தம் செய்து மீதமுள்ள வைப்புத்தொகை ரூ.**1,40,007/-**னை மேற்படி பணியினை

| | | |
|---|---|---|
| | செய்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜோதிமணி என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :_ காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ள முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.**1,99,450/-**ல் தணிக்கை தடை தொகை ரூ.**59,443/-**னை பிடித்தம் செய்து மீதமுள்ள ரூ.**1,40,007/-**னை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் அவர்களின் பரிந்துரைப்படி ஒப்பந்ததாரர் திரு.ஜோதிமணி என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>பி3/5064/2024 | |
| | **20)** தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் அனுமதியற்ற கட்டுமானங்கள், அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாக கட்டி வரும் கட்டிடங்கள் மீது உரிய அறிவிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவும், வார்டுகளில் அவ்வப்போது ஏற்படும் ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அறிவிப்பு வழங்கி ஆக்கிரமிப்புனை அகற்றும் பணி மேற்கொள்ளவும், மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களை கண்டறிந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும் இளநிலை / உதவி பொறியாளர்களுக்கு (நகரமைப்பு) உதவியாக 5 தொழில்நுட்ப உதவியாளர்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (City Lively hood Centre) மூலம் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். 5 தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிக்காலத்தினை 01.04.2024 முதல் 31.03.2025 வரை நீட்டித்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ **11.00** இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br><br>இம்மாநகராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (City Lively hood Centre) மூலம் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய பணிக்காலத்தினை 01.04.2023 முதல் 31.03.2024 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ. 11.00 இலட்சத்தை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எப்1/288/2021 | **459)**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **21)** அரசாணை நிலை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் நாள் 04.02.2019ல் உத்திரவின்படி, தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூரிய விதிகளில் குறிப்பிடிபிட்டுள்ளவாறு விதி எண். 30 (1), (2)ன்படி, பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி EWS ஆகியவற்றை கண்டறிந்து தெருக்களின் விபரங்களை உறுப்பினர் செயலர், தூத்துக்குடி உள்ளூர்திட்டக் குழுமம் அவர்களின் வாயிலாக, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று நடவடிக்கை தொடர ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகள் ஆகியவற்றினை உறுப்பினர் செயலர், தூத்துக்குடி உள்ளூர்திட்டக் குழுமம் அவர்களின் வாயிலாக, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. ஒப்புதல் வழங்கலாம்.<br>2. பட்டியலில் கண்டுள்ளவாறு பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகள் ஆகியவற்றினை உறுப்பினர் செயலர், தூத்துக்குடி உள்ளூர்திட்டக் குழுமம் அவர்களின் வாயிலாக, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க ஒப்புதல் அளிக்கலாம்.<br>எப்.1/ 00753 / 2019 | **460)**அலுவலகக் குறிப்பு<br>1.ஒப்புதல் வழங்கப்பட்டது<br>2.ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| | 22) தூத்துக்குடி மாநகராட்சி மூலம் பராமரிக்கப்படும் பூங்கா மற்றும் தோட்டப்பணிகளுக்கு 98 தூய்மை பணியாளர்கள் நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் தற்காலிகமாக பணிபுரிந்து வந்தனர். அப்பணியாளர்களுக்கு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2022—23ம் வருடத்திய செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி பணியாளர்களின் ஊதிய விகிதப்படி ஊதியம் வழங்கும் பொருட்டு மாமன்ற தீர்மான எண் 369 நாள் 04.10.2023ன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கிய நிலையில் தற்போது மேற்படி மாமன்ற தீர்மானத்தின் அனுமதி பெற்ற கால அளவு முடிவு பெற உள்ளதாலும், மேற்கண்ட பணியாளர்கள் தொடர்ந்து தற்காலிகமாக பணிபுரியும் பொருட்டு இம்மாநகராட்சியின் 4 மண்டலத்தினையும் சேர்த்து கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **461)**அலுவலகக் குறிப்பு<br>அனுமதிக்கப் பட்டது |

| வ. எண் | பணியாளர் எண்ணிக்கை | ஒரு நாள் ஊதியம் (ரூ.) | மன்ற அனுமதி தேவைப்படும் கால அளவு | உத்தேச செலவினம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | 98 | 433/– | 26.06.2024 முதல் 31.03.2025 வரை | 1,18,81,520/– |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் தற்காலிகமாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி ஊதிய விகிதப்படி பணியமர்த்திட வேண்டியும், மேற்படி பணியாளருக்கு உத்தேச ஊதியம் தொகை **26.06.2024** முதல் **31.03.2025** வரையிலான **280** நாட்களுக்கு ரூ.**121.19/–** இலட்சம் **2** % சேவை வரியுடன் சேர்த்து நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** மேற்படி **8** எண்ணிக்கையிலான பணியாளர்களை CLC மூலம் தற்காலிகாமாக பணியமர்த்திடவும், மாவட்ட ஆட்சித்தலைவர் செயல்முறை **22–23**ன் படி பணியாளருக்கு ஊதியம் தொகை நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து **26.06.2024** முதல் **31.03.2025** வரையிலான **280** நாட்களுக்கு ஊதியம் வழங்கிட ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.**121.19/–** இலட்சத்திற்கு **2%** சேவை வரியுடன் சேர்த்து மாமன்றம் அனுமதிக்கலாம்.

எச்1/1244/2023

**23)** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பள்ளி கழிவறைகள் பராமரிக்கும் பணிக்கு **40** தூய்மை பணியாளர்கள் நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் தற்காலிகமாக பணிபுரிந்து வந்தனர். அப்பணியாளர்களுக்கு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் **2022–23**ம் வருடத்திய செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி பணியாளர்களின் ஊதிய விகிதப்படி ஊதியம் வழங்கும் பொருட்டு மாமன்ற தீர்மான எண் **299** நாள் **31.03.2023**ன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கிய நிலையில் மேற்படி மாமன்ற தீர்மானத்தின் அனுமதி பெற்ற கால அளவு முடிவு பெற்ற காரணத்தினாலும் மற்றும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்து காரணத்தினால் ஏப்ரல் **2024** முதல் மே **2024** வரையிலான காலங்களுக்கு **29.04.2024** அன்று ஆணையர் அவர்களின் அவசர

462) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது

அவசியம் கருதி மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து ஏப்ரல் 2024 முதல் மே 2024 வரையிலான காலங்களுக்கு ஊதியம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு விட்டது.

| வ. எண் | பணியாளர் எண்ணிக்கை | ஒரு நாள் ஊதியம் (ரூ.) | மன்ற அனுமதி தேவைப்படும் கால அளவு | உத்தேச செலவினம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | 40 | 433/– | 26.03.2024 முதல் 25.05.2024 வரை | 1056520/– |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் தற்காலிகமாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2022–23ம் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி ஊதிய விகிதப்படி வழங்கப்பட்ட ஊதியம் 2 சதவீதம் சேவை வரியுடன் சேர்த்து தொகை ரூ.10.78/– இலட்சம் நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் கல்வி நிதியிலிருந்து வழங்கியதற்கு மாமன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ஆ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஜீன் 2024 முதல் மார்ச் 2025 வரையிலான காலங்களுக்கு ஊதியம் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் எண்ணிக்கை | ஒரு நாள் ஊதியம் (ரூ.) | மன்ற அனுமதி தேவைப்படும் கால அளவு | உத்தேச செலவினம் (ரூ.) | மாவட் ஆட்சித் தலைவரின் 2022–23 செயல்முறை ஆணையின் ஊதியம் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | 40 | 433/– | 26.05.2024 முதல் 31.03.2025 வரை | 5369200/– | 433/– |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி ஊதிய விகிதப்படி முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்திட வேண்டியும், மேற்படி பணியாளர்களுக்கு உத்தேச ஊதியம் தொகை ரூ.54.77/– இலட்சம் 2 % சேவை வரியுடன் சேர்த்து நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் கல்வி நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி

| | | |
|---|---|---|
| | வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு. 1) 26.03.2024 முதல் 25.05.2024 வரையிலான காலங்களுக்கு ஊதியம் ரூ.10.78/– இலட்சம் 2 % சேவை வரியுடன் சேர்த்து மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் தொகை நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் கல்வி நிதியிலிருந்து வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்<br>2) மேற்படி 40 எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு ஊதியம் தொகை நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் 26.05.2024 முதல் 31.03.2025 வரையிலான காலங்களுக்கு கல்வி நிதியிலிருந்து மாவட்ட ஆட்சியர் செயல்முறை ஆணை 2022–23ன்படி தினக்கூலி பணியாளர்களுக்கு வழங்க ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.54.77/– இலட்சம் 2 % சேவை வரியுடன் சேர்த்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்1/1243/2023 | |
| | 24) அ) இம்மாநகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் நகர்புற வாழ்வாதார மையம் மூலம் பணிபுரியும் நகர சுகாதார செவிலியர்கள், கணினி இயக்குநர், பிளான்டோரியம் கணினி இயக்குநர் மற்றும் போட்டோ கிராபர் ஆகியோருக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி பணியாளர்களின் ஊதிய விகிதப்படி ஊதியம் வழங்கும்பொருட்டு மாமன்ற தீர்மான எண்கள் முறையே 294,347,417 நாள் 31.03.2023, 27.07.2023 மற்றும் 31.01.2024ன்அனுமதி பெற்று ஊதியம் வழங்கிய நிலையில் தற்போது மேற்படி மாமன்ற தீர்மானத்தின் அனுமதி பெற்ற கால அளவு முடிவு பெற்ற காரணத்தினாலும் மற்றும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்து வந்த காரணத்தினால் அவசர அவசியம் கருதி 29.04.2024 அன்று ஆணையர் அவர்களின் மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து ஏப்ரல் 2024 முதல் மே 2024 வரையிலான காலங்களுக்கு ஊதியம் கீழ்க்கண்டவாறு | 463)அலுவலகக் குறிப்பு<br>1.அங்கீகரிக்கப் பட்டது<br>2.அனுமதிக்கப் பட்டது |

வழங்கப்பட்டு விட்டது.

| வ. எண் | பணியின் தன்மை | பணியாளர் எண்ணிக்கை | ஒரு நாள் ஊதியம் (ரூ.) | மன்ற அனுமதி தேவைப்படும் கால அளவு | உத்தேச செலவினம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | பிளான்டேரியம் ( D.E.O) | 1 | 573 | 26.03.2024 முதல் 25.05.2024 | 34953 |
| 2 | போட்டோகிராபர் | 1 | 633 | 26.03.2024 முதல் 25.05.2024 | 38613 |
| 3 | சுகாதாரபிரிவு கணினி இயக்குபவர் | 16 | 573 | 26.03.2024 முதல் 25.05.2024 | 559248 |
| 4 | நகர சுகாதார செவிலியர் | 8 | 11000 மாதம் | 26.03.2024 முதல் 25.05.2024 | 176000 |
| | | 4 | | 01.04.2024 முதல் 25.05.2024 | 88000 |
| மொத்தம் | | | | | 8,96,814 |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் தற்காலிகமாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி ஊதிய விகிதப்படி மாமன்ற பின்னேற்பு அனுமதி பெற்று வழங்கப்பட்ட ஊதியம் 2 % சேவை வரியுடன் சேர்த்து தொகை ரூ.9.15/– இலட்சம் நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து வழங்கியதற்கு மாமன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ஆ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஜீன் 2024 முதல் மார்ச் 2025 வரையிலான காலங்களுக்கு ஊதியம் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் தன்மை | பணியாளர் எண்ணிக்கை | ஒரு நாள் ஊதியம் (ரூ.) | மன்ற அனுமதி தேவைப்படும் கால அளவு | உத்தேச செலவினம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | பிளான்டேரியம் ( D.E.O) | 1 | 573 | 26.05.2024 முதல் 31.03.2025 | 177630 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | போட்டோகிராபர் | 1 | 633 | 26.05.2024 முதல் 31.03.2025 | 196230 |
| 3 | சுகாதாரபிரிவு கணினி இயக்குபவர் | 16 | 573 | 26.05.2024 முதல் 31.03.2025 | 2842080 |
| 4 | நகர சுகாதார செவிலியர் | 8 | 11000 மாதம் | 26.05.2024 முதல் 31.03.2025 | 880000 |
| | | 4 | | 26.05.2024 முதல் 31.03.2025 | 440000 |
| மொத்தம் | | | | | 45,35,940 |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி ஊதிய விகிதப்படி முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்திட வேண்டியும், மேற்படி பணியாளர்களுக்கு உத்தேச ஊதியம் தொகை ரூ.46.27/— இலட்சம் 2 % சேவை வரியுடன் சேர்த்து நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1) 26.03.2024 முதல் 25.05.2024 வரையிலான காலங்களுக்கு ஊதியம் ரூ.9.15/— இலட்சம் 2 % சேவை வரியுடன் சேர்த்து மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் தொகை நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

2) மேற்படி 30 பணியாளர்களுக்கு ஊதியம் தொகை நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் 26.05.2024 முதல் 31.03.2025 வரையிலான காலங்களுக்கு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை 2022—23ன்படி தினக்கூலி ஊதியம் பொது நிதியிலிருந்து வழங்க ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.46.27/— இலட்சத்திற்கு (2 % சேவை வரியுடன் சேர்த்து) மாமன்றம் அனுமதிக்கலாம்.

எச்1/1242/2023

25) தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தின் 30.11.2023ம் தேதிய 342 ஆம் எண் தீர்மானத்தில், சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் (பழைய பேருந்து நிலையம்) கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கான குத்தகை உரிமத்திற்கு (உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு ) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 11.03.2024 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் என அனைத்து மன்டல அலுவலக அறிவிப்பு பலகையில் 05.03.2024 அன்று அறிவிக்கப்பட்டது.

அதன்பேரில் 11.03.2024 ( திங்கள்கிழமை ) அன்று மாலை 2.00 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் துணை ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அண்ணா பேருந்து நிலையத்தில் (பழைய பேருந்து நிலையம்) தரை தளம் மற்றும் மூன்று தளத்துடன் அமைக்கப்பட்டுள்ள வணிக வளாக **கடை எண். F 33**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|

**464)**அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. வில்லியம்ஸ் பினோபின், 1H/4, ஜார்ஜ் ரோடு தூத்துக்குடி. | ரூ. 6200/– | ரூ.6,250/– |
| 2. | திரு. சிவராஜ் மோகன், 112/1, 4வது தெரு, சுப்பையாமுதலியார்புரம் தூத்துக்குடி. | | ரூ.6,300/– |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சிவராஜ் மோகன் என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.6,300/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது **கடை எண். F33** கடையின் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

அ16/2943/23

| | | |
|---|---|---|
| | **26)** தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாளைரோடு டி.எம்.பி காலனி அருகில் உள்ள டோபிகானா வணிக வளாகத்தில் உள்ள கடைகள், தச்சர் தெருவில் உள்ள வணிக வளாக கடைகள் மற்றும் ஜெயராஜ் ரோடு பலஅடுக்கு வாகனம் நிறுத்தும் இடத்தில் உள்ள பல கடைகள் ஏழு முறை குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் எந்த நபரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பெரும் பொருட்செலவில் கட்டப்பட்ட வணிக வளாகங்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும் மாநகராட்சியின் வருவாய் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி இடங்களில் உள்ள கடைகளுக்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகைத் தொகையினை மறுநிர்ணயம் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. முன்னர் நடந்த ஏலத்தில் கடைகளை எடுத்தவர்கள் வாடகை செலுத்தாமலும் பயன்பாட்டிற்கு கொண்டு வராமலும் இருக்கும் | **465)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | இனங்களை இரத்து செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ16/4033/2022 | |
| | 27) தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலம் பகுதியில் அமைந்துள்ள ரோஜ் பார்க் வளாகத்தில் சர்க்கஸ், கலைநிகழ்ச்சிகள், கூட்ட அரங்கங்கள் போன்றவைகள் பொதுமக்கள் பொழுது போக்கும் நோக்கிலும் மாநகராட்சியின் வருவாயினை பெருக்கும் வகையிலும் மேற்படி இடத்தினை வாடகைக்கு வழங்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/2436/2024 | 466)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | 28) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட தெற்கு காட்டன் ரோடு, வணிக வளாக கடையின் முதல் தளத்தில் உள்ள கடை எண்கள்.எப்1, எப்2, மற்றும் இரண்டாம் தளத்தில் கடை எண்கள்.எஸ்1, எஸ்2, ஆகிய கடைகள் 29.11.2023 அன்று ஏழாவது முறையாக குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டும் எந்த நபரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. மாநகராட்சியின் வருவாயினை பெருக்கும் வகையில் மேற்படி முதல் தள கடைகளை திருமண மண்டபமாக மாற்றம் செய்வதற்கும், அதற்குரிய செலவினங்கள் மேற்கொள்வதற்கும் தொடர்ச்சியாக உள்ளூர் சந்தை அங்காடி மதிப்பினை ஆராய்ந்து கிழக்கு மண்டலம் உதவிசெயற்பொறியாளர்(திட்டம்) அவர்களால் தயார் செய்யப்படும் வாடகைத் தொகையினை நிர்ணயம் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் மற்றும் இரண்டாம் தளத்தில் உள்ள கடைகளை மறுநிர்ணயம் செய்து பொதுஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோருவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/2380/2022 | 467)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | 29) இம்மாநகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையம், குருஸ்புரம் பாலிகிளினிக் மற்றும் அதன் அருகில் உள்ள மாநகராட்சி பள்ளிகூடம், ஆணையர் குடியிருப்பு, தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான பல அடுக்கு வாகன காப்பக நிறுத்துமிடம், தூத்துக்குடி மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் | 468)அலுவலகக் குறிப்பு<br>1.அங்கீகரிக்கப் பட்டது<br>2.அனுமதிக்கப் |

படிப்பக வளாகம் மற்றும் பூங்கா மேற்பார்வைக்கு டெக்ஸ்கோ நிறுவனத்திலிருந்து பணியமர்த்தப்பட்ட தலைமை காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு 2024 ஏப்ரல் மாதத்திற்கான ஊதியம் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்து காரணத்தினால் 13.05.2024 அன்று ஆணையர் அவர்களின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து ஏப்ரல் 2024க்கான ஊதியம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு விட்டது.

| வ. எண் | பணியின் தன்மை | பணியாளர் எண்ணிக்கை | மன்ற அனுமதி தேவைப்படும் கால அளவு | உத்தேச செலவினம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | தலைமை காவலர் | 2 | 01.04.2024 முதல் 30.04.2024 | 3,22,218/– |
| 2 | காவலர் | 6 | | |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு டெக்ஸ்கோ ஒப்பந்த பணியாளருக்கு மாமன்ற பின்னேற்பு அனுமதி பெற்று வழங்கப்பட்ட ஊதியம் ரூ.3.22/– இலட்சம் (சேவை வரி உட்பட) பொது நிதியிலிருந்து வழங்கியதற்கு மாமன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ஆ) மேற்கண்ட பணியாளர்களுக்கு மே 2024 முதல் மார்ச் 2025 வரையிலான காலங்களுக்கு ஊதியம் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் தன்மை | பணியாளர் எண்ணிக்கை | மன்ற அனுமதி தேவைப்படும் கால அளவு | உத்தேச செலவினம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | தலைமை காவலர் | 2 | 01.05.2024 முதல் 31.03.2025 | 41,61,476/– |
| 2 | காவலர் | 6 | | |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு டெக்ஸ்கோ ஒப்பந்த பணியாளருக்கு முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்திட வேண்டியும், மேற்படி பணியாளர்களுக்கு உத்தேச ஊதியம் தொகை ரூ.41.61/– இலட்சம் (சேவை வரியுடன் சேர்த்து) பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1)01.04.2024 முதல் 30.04.2024 வரையிலான காலங்களுக்கு ஊதியம் ரூ.3.22/– இலட்சம் (சேவை வரி உட்பட) மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் தொகை பொது

பட்டது

| | | |
|---|---|---|
| | நிதியிலிருந்து வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்<br><br>2)மேற்படி பணியாளர்களுக்கு 01.05.2024 முதல் 31.03.2025 வரையிலான காலங்களுக்கு பொது நிதியிலிருந்து உத்தேச ஊதிய செலவுத்தொகை ரூ.41.61/— இலட்சம் (சேவை வரி உட்பட) வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்1/2129/2023 | |
| | 30) இம்மாநகராட்சியின் தருவை ரோடு, திரேஸ்புரம், கணேஷ் நகர் மற்றும் பாத்திமா நகர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிந்த நகர சுகாதார செவிலியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற காரணத்தினால் ஏற்படும் காலி பணியிடத்தினை நிரப்பிடும் பொருட்டு அரசாணை எண் 152 நாள் 20.10.2022ன்படி ஏற்கனவே பணியில் இருந்து ஓய்வு பெறும் பகுதி நேர செவிலியர்கள் பணியிடத்தில் வெளி முகமை மூலம் நிரப்பி கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. எனவே தற்போது மேற்கண்ட நகர்ப்புற சுகாதார மையங்களில் பொது மக்களுக்கு மாநகராட்சி மூலம் அளிக்கப்பட்டு வரும் மருத்துவ சிகிச்சைகளுக்கு போதுமான அளவு செவிலியர் இல்லாத காரணத்தினால் ANM (Auxillary Nurse and Midwife) பயிற்சி முடித்த 4 செவிலியர்களை நகர்ப்புற வாழ்வாதார மையம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாதம் ரூ.11000/— ஊதிய விகிதப்படி நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் தற்காலிகமாக பணியமர்த்திட வேண்டியும், மேற்படி பணியாளருக்கு ஜீன் 2024 முதல் 31.03.2025 முடிய உத்தேச ஊதியம் தொகை ரூ.4.50/— இலட்சம் 2 % சேவை வரியுடன் சேர்த்து நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :— மேற்படி 4 செவிலியர் பணியாளருக்கு ஊதியம் தொகை ஜீன் 2024 முதல் 31.03.2025 முடிய நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்த தொகைப்படி பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கிட அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.4.50 இலட்சம் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்1/1242/2023 | 469)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | 31) இம்மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவின் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற | 470)அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் |

| | | |
|---|---|---|
| | நிலையில் முதிர் கொசுக்களை ஒழிக்க VEHICLE MOUNTED FOGGING MACHINE மூலம் இம்மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும் OUTDOOR மற்றும் INDOOR FOGGING வகைக்கு பயன்படுத்தப்படும் பைரித்திரம் **(PYRETHRUM 2% EXTRACT)** என்ற மருந்தினை TNMSCஅனுமதி பெற்ற **M/s.Agri Biochem Pvt Ltd., West Bengal** நிறுவனத்தின் மூலம் **1 லிட்டர் ரூ. Rs. 995.92/- (ரூ.844/– +18% GST)** வீதம் **1000** லிட்டரினை கொள்முதல் செய்வதற்கும் மேற்படி இக்கொள்முதலுக்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,00,000/–னை (ரூபாய் பத்து இலட்சம்) அவசர அவசியம் கருதி பொது சுகாதாரத்திற்கு மேற்கொள்ளப்படும் மேற்படி செலவினத்தை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>எச்2/02393/2024 | பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 28–06–2024

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி